தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 12-4-58 | சனிக்கிழமை | இதழ் 39

கதர்த் துப்பட்டிகளே!

இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

தி. மு. க.வின் பணி

தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபட்டு சென்னை சட்ட மன்றத்தில் பதினைந்து ஸ்தானங்களையும், டில்லி மக்கள் சபையில் இரண்டு ஸ்தானங்களையும் பெற்றிருக்கிறது. இதனால் தேசத்திற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது என்று சிலர் கேட்கிறார்கள். எதிர் காலத்தில் என்ன நிகழப் போகிறது என்பதைக் காலமே காட்ட இருக்கிறது என்றாலும், இப்போது காங்கிரஸ் நண்பர்களுக்கு, பொது மக்களைச் சந்திக்கும் வாய்ப்பினை தி. மு. கழகம் தான் ஏற்படுத்தித் தந்திருக்கிறது. நமக்கு எதிராக சென்னை மந்திரிகள் மேடை யமைத்து ஏதோ பேச நினைக்கிறார்கள்; பேசுகிறார்கள். மேடையில் பேசும்போது உள்ளத்தில் இருப்பது வெளிவந்தே தீரும். மக்கள் முன்னிலையில் நல்லதைப் பேசிவிட்டு நிர்வாகத்திற்குப் போகும்போது மேடையில் பேசிய வாசகங்கள் அவர்களது மனதைக் குடைந்தே தீரும். இது யாரால் ஏற்பட்டது? தி. மு. கழகம் சட்ட மன்றத்திற்குப் போனதால் ஏற்பட்ட மாற்றம்.

இன்னொரு வதந்தி அடிபடுகிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பலியிடப்பட்ட பீடத்திற்கு சென்னை நிதிமந்திரி சுப்ரமணியத்தை டில்லியிலிருந்து அழைத்ததைப் போலவும், காபினெட் அந்தஸ்துக் கிடைத்தால் தான் வருவதாகச் சுப்ரமணியம் சொன்னதாகவும், அது கிடைக்காதென்று டில்லி சொன்னதாகவும், அப்படியானால் தான் வரமுடியாதென்று சுப்ரமணியம் சொன்னதாகவும் அதற்குப் பிறகுதான் கோபால ரெட்டியாரை அழைத்துக் கொண்டதாகவும் ஒரு வதந்தி அடிபடுகிறது. காங்கிரஸ் நண்பர்கள் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் இதைச் சொல்கிறார்கள். ஏன் சொல்கிறார்கள் என்றால், "பார்த்தீர்களா? ஆந்திராவின் முதன் மந்திரியாகவும், ஆந்திராவும் சென்னையும் ஒன்றாக இருந்த காலத்தில் பல ஆண்டுகள் சென்னையின் நிதிமந்திரியாகவும் இருந்த கோபால ரெட்டியார் அந்தஸ்தில்லாத பதவிக்குப் போய்விட்டார். எங்கள் சுப்ரமணியம் போகவில்லை. எங்களுக்கும் மானம் இல்லாமலில்லை" என்று நமக்கு நினைவுறுத்துவதாக எண்ணிக் கொண்டு, கதர்(த்) துப்பட்டிகள் என்னிடம் அடிக்கடி கூறுகிறார்கள். இன்றையத் தினம் இது மாதிரியான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் தி. மு. கழகம் சட்ட மன்றத்திற்குப் போனது தான் என்றால், அது மிகையாகாது.

முன்பெல்லாம் சென்னை மந்திரிகள் டில்லிக்குப் போவதும் தெரியாது, வருவதும் தெரியாது. இன்றையத் தினம், அவர்கள் புறப்படும் பொழுது பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்து விட்டுப் போகிறார்கள். இதற்கெல்லாம் தூண்டுகோல் யார்? தி. மு. கழகம் அல்லவா!

வடக்கின் வளர்ச்சி

வடநாடு தென்னாட்டை ஒதுக்கித் தள்ளுகிறது என்று சொன்னால், "இல்லை, இல்லை, டில்லி எல்லோரையும் சமமாகவே மதிக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

ஈ.வே.கி.சம்பத்

பதினைந்து நாட்களுக்கு முன்பு டில்லி மக்கள்சபையில் கல்வி மான்யக் கோரிக்கை வந்தது. எனக்கு அங்கு பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. சர்க்காரின் அறிக்கையை ஊன்றிப் படித்தேன். ஒரு கோடியே முப்பத்திநான்கு லட்ச ரூபாய்கள் வடநாட்டிலே இருக்கிற பல்கலைக் கழகத்திற்கு மட்டும் ஆண்டுக்கு ஒரு முறை தரப்படும் மான்யத் தொகையாக ஒதுக்கியிருக்கிறார்கள். காசி பல்கலைக் கழகம், வங்காளத்திலே உள்ள விஸ்வ பாரதி, அலிகார் பல்கலைக்கழகம், டில்லி பல்கலைக் கழகம்—இந்த நான்கு பல்கலைக் கழகங்களுக்கு மட்டும் மொத்தமாக இந்திய சர்க்கார் இந்தியாவின் பொது கஜானாவிலிருந்து அள்ளித் தருகிறது. மேலும் கல்வி அபிவிருத்தித் திட்டத்தில், வடநாட்டுக்கு அதிகமான வசதிகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் எஸ். எஸ். எல். சி. படித்து முடித்தபின், கல்லூரியில் படிக்காமல் பி.ஏ., எம்.ஏ. பரீட்சை எழுத முடியாது. ஆனால் வடநாட்டில்அதற்கு வழி இருக்கிறது. உத்தியோகம் பார்ப்பவர்கள் கூட மாலை ஆறு மணிக்குமேல் தனியார் போதனைக் கல்லூரிகளில் பயின்று பட்டப்பரீட்சைகள் எழுத அனுமதிக்கப்படுகிறது. இங்கு மட்டும் இல்லை. ஆனால் மேஸ்திரி வேலைக்குப் பயிற்சி அளிக்கப்படும் பயிற்சிப் பள்ளிகள் தென்னாட்டில் இருக்கின்றன. அதையும் விரைவில் மூடிவிட நினைப்பதாக கல்விமான்ய விவாதத்தின்போது அமைச்சர் சொன்னார். மூடுவதற்குக் காரணமென்ன? அவர்கள் மேற்பார்வையில் குழைக்கும் சாந்து கெட்டுவிடுகிறதா? சிமிண்டைக் கெடுத்துவிடுகிறார்களா? காரணம் ஒன்றும் தெரிவிக்கவில்லை.

பண்டிதர் பலவீனம்

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்குக் கொஞ்ச நாட்களாக தென்னாட்டின் மீது கவனம் அதிகம். கவனம் என்பதைக் காட்டிலும் கோபம் என்று சொல்லலாம். விவசாயிகள் நீண்ட நாள் பயிர்களையே விளைவிக்கிறார்கள், ஏனெனில் அதுதான் அவர்களுக்கு நிறைய பணத்தைக் கொடுக்கிறது. வாழைபோன்ற குறுகிய காலப் பயிர்களைச் செய்வதில்லை-என்று ஜவகர்லால் நேரு ஒரு முறை பேசினார். எதிரே இருந்த பத்திரிகை நிருபர்கள்கூடச் சிரித்தார்கள். இன்னொரு முறை,

— 3-ம் பக்கம் —

இது ஒரு அதிசயப்பிராணி!

'அசுணமா' என்பது ஒரு அதியற்புதப் பிராணி. அது விலங்கு இனத்தைச் சார்ந்ததா? பறவையினத்தைச் சேர்ந்ததா? என்பது விளங்கவில்லை. விலங்குபோல் குட்டி ஈனும் இயல்பும், பறவைபோல் தாவிப் பறக்கும் தன்மையும் அதற்கு உண்டு என்பர். சிறிய கலைமான் அளவு பருமனுடையதாம். புகைபோன்ற உருவ நலம் வாய்ந்தது. செம்மை கலந்த வெண்மை நிறமுடையது. இத்தகு உருவ நலன் வாய்ந்தப் பிராணி இந்நாட்டில் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. பண்டைக் காலத்தில் அசுணம் எனும் பிராணி தமிழகத்தில் வாழ்ந்ததாக இலக்கியங்கள் இயம்புகின்றன. பெரும் புலவர்களின் பாடல்களில் அசுணத்தைக் காணலாம்.

அசுணமாவின் குண நலன்கள் கேட்டின் புறத்தக்கனவாம். விந்தையும் வியப்பும், உயரிய தன்மையும் பொலிந்து காண்கிறது அசுணத்தின் இயல்பில். இசையறியும் ஆற்றல் அதனிடையே இயற்கையாக இருக்கிறது. இசையின் இனிமையை ரசிப்பதில் அசுணம் தலையாயது. 'இசையறிமா' எனும் சிறப்புப் பெயர் வழங்குதல் கவனத்திற்குரியது. பண்ணின் இனிய மயக்கில் சொக்கிச் சுழலும் அசுணம். அதுபோது வல்லோசை வந்து அசுணத்தின் கவனத்தை கெடுக்குமாயின்; அப்பிராணி அறிவு கெட்டு, உணர்வு இழந்து மாண்டு போகுமாம்! விந்தையான அசுணத்தின் வாழ்க்கைஅமைப்பே அமைப்பு! சிந்தை மணக்கும் நாதம் கெட்டு நிந்தை நிறைந்த பறையொலி கேட்ட அளவில் உயிர் நீக்கும் அசுணத்தின் அருமை வாழ்வுதான் என்னே? வண்டுகளின் ரீங்காரம், தென்றலின் மென்னோசை ஆகிய இவைகட்கெல்லாம் அசுணம் செவிமடுத்து மகிழ்ந்திருக்குமாம். பறையோசை கேட்பினும், இடியோசை கேட்பினும் உடல் பதைத்து உயிர்விடும் தன்மையதாம் அசுணம். உலக உயிர்கள் எதற்கும் இல்லாத ஒரு இயல்பான இயற்கை மரணம்—'இசை மரணம்' இசையறிமாவுக்கு இருக்கிறது.

குன்றுகள் நிறைந்த பகுதிகளில் வாழும் தன்மையது அசுணம். குறிஞ்சி நிலத்தில் அது வதியுமாம். 'குன்றுறை அசுணம்' என்று தொல்காப்பியத்தில் வருதல் ஈண்டு கவனிக்கத்தக்கதாம். உயர்ந்த குணத்தினையுடைய அசுணத்தின் வாழ்வு முறைகளை அறிய நமக்கு ஆவல் எழுவது இயல்புதானே? தமிழ் இலக்கியங்கள் அசுணத்தின் குணச் சிறப்புகளை தெரிவிக்கின்றன. நமது ஆவலை தணித்துக்கொள்ள இலக்கியத்தில் அங்கும் இங்குமாக மின்னலிடும் அசுணத்தின் பண்பினை கண்டறிவோம்.

அசுணம் பறவையா? விலங்கா? கேள்விக்குறி அழித்து குத்திடும்போது சிலப் புலவர்கள் அதனைப் பறவை என்கின்றனர். பிங்கலந்தையில் பிங்கல முனிவர் 'அசுணமா இசையறி பறவை கேகயப்புள்' என்று சித்தரிக்கிறார். இதனால் அது பறவை என்பதும், அதற்கு 'கேகயப்பின்' எனும் பெயர் உண்டு என்பதும் தெளிகிறது. அடுத்து நைடதத்தில் அசுணம் பறவையாக சொல்லப்படுகிறது. 'அசுணமென் புள்ளென அலமந்தேகினார்' என்று அதிவீரராமப் பாண்டியன் விளக்குகிறார். மென்மையான தன்மையுடைய பறவை என்று குறிக்கிறார். அப்படியே கூர்ம புராணத்திலும் 'முரசொலி கேட்ட அசுணமென் புள்ளின்' என்று வருதல் காண்க. அசுணத்தை பறவை எனக் காட்டும் புலவர்களின் பாடல்கள் ஓர் பக்கம். மறு பக்கம் விலங்காகக் காட்டும் புலவர்களின் பாடல்கள்.

'மறையிற்றன் மானை அருளாது என்று கலித்தொகையில் வருவதை காணும்போது பறவை என ஏற்க முடியவில்லை.' கனிந்த பாடல் கேட்டு அசுணமா வருதல் காணாய்' என்று கம்பராமாயணத்தில் வருகிறது. 'அசுணநன்மா அந்நிலைக் கண்ணே' என்கிறது பெருங்கதை.

> **அசுணநன்மா என்னும் பிராணியைப்பற்றிய பல அற்புதமான பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அது குறித்து புலவர்களிடையே எழுந்த கருத்து வேறுபாடுகளும், உவமை நயங்களும் கட்டுரையைச் சிறப்பிக்கின்றன.**
>
> **[ஆ-ர்.]**

இவைபோன்ற வரிகளால் அசுணம் விலங்காகிறது. எதனை ஏற்று எதனை விடுவது? ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து முடிவு செய்யட்டும். அதுவரையும் ஓய்ந்திருப்போம். நாம் ஆராய்ச்சி விடுத்து குணநலன்களை ரசிப்போம்.

உருவும் திருவும் வாய்க்கப்பெற்ற வனிதை ஒருத்தி வருத்தம் சூழ இருந்தாள். அவளின் மெலிந்த பசலை பாய்ந்த தோற்றம், அவள் மனக்குமுறலை விளம்பிற்று. எவரையோ எதிர்நோக்கும் விழிகள் சுழன்றன. சுழல் விளக்குகளாக எங்கும் கானல் தோற்றம். எண்ணங்கள் எதிர்பட்டு மோதிக்கொண்டன. இதயத்தில் நிகழும் குரலோசைகளின் அசைவுகள் அவளை ஆட்டிற்று. முகத்தில் மாறுபாடான உணர்வுக்கீறல்கள்.

'அவர் எங்கே?' மனக்குரலின் கேள்வி.

'யாரை கேட்கிறாய்?' மனத்தின் பதில் கேள்வி.

'ஒன்றும் தெரியாதவளாக நடிக்கிறாயே! உன் உளைச்சல்தான் தெரிகிறதே! அவரைத்தான் – உன் அத்தானைத்தான்!' மனக்குரலின் நகையொலி.

'வருவார்' மனத்தின் விரசமான பதில்.

'நப்பாசை இன்னும் உன்னை விட்டபாடில்லை. கண்கள் ஒளி குன்றின. கால்கள் கடுத்தன. தலைவனை மட்டும் காணோம். எப்போது வருவார்? வரும்காலம் ஏதும் குறித்தாரோ? குரலின் கேலி.

"உனக்கேன் இத்தனைப் பொறுமை? வருவதும் வராததும் என்னைப் பொறுத்தது. நீ ஏன் பரிதாபப்படுகிறாய்?" மனம் சீறியது.

"சீறுவதால் உன் கலிதீருமானால் நன்றாகச் சீறு! எனக்கேன் பொறுமை உன்மேல்? முன்பெல்லாம் எத்துணை எழிலோடும் இன்பத்தோடும் இருந்தாய்?" குரல் உருகியது.

"அழகும் இன்பமும் என்னை வலம் வந்தன. ஆமாம் அந்த அழகை அழகு செய்தது யார்? இன்பத்தை கரைபுரள விட்டது யார்? எல்லாம் என் தலைவரின் தயவால்தானே நடந்தன?" மனம் கூவியது உற்சாகமாக.

"நீ சொல்லுவதெல்லாம் உண்மைதான். ஆனால், அவன் அன்று கொடுத்த இன்பத்தின் இரட்டிப்பான இன்றைய நிலை? முன்னும் பின்னும் யோசித்து நடக்கவேண்டும்," குரல் வியாக்கியானம் செய்தது.

"முன்பு என்ன நடந்து பின்பு கெட்டுவிட்டது? நீர்வீழ்ச்சியின் சாரலைப்போன்றே – இன்பவீழ்ச்சியின் சாரலில்தான் ஒதுங்கியிருக்கிறேன். தலைவரின் பிரிவால்தான் எத்தனை இனிய நினைவுகள் அற்றை நாளைய ஆசை நிகழ்ச்சிகள்! அவையெல்லாம்..." மனம் கனவில் பேசியது.

"கனவு பேச்சுக்கள் உன்னை திருப்திப்படுத்தாது. பெருமையான பேச்சோரத்தில் துயரம் துடிக்கிறதே! பொன்சொரியும் உன் மேனி பசலைப் பாய்ந்து கிடக்கிறதைப்பார்! அன்போடு உன் தலைவன் தழுவிய பொலிவான தோள்கள் மெலிந்து கிடப்பதைப் பார்! தென்றலும் மலருமாக நீயும் உன் தலைவனும் கூடிக்களித்த நாட்கள்! இன்று வதைப்பதைப் பார்!" குரலின் முழக்கம்.

'பேசாதே! பேசாதே!' மனம் அலறியது.

அலறாதே! அலறுவதால் உண்மை அவசியமற்றுப் போகாது. நீ மறைக்கலாம் உன் துயரை. ஆனால், உன் மேனி! துயரத்தின் சாரல் படிந்த பசுந்தளிர் மேனி உண்மையை சொல்கிறதே. அசுணமாவை நீ அறிவாயல்லவா? அதனை அறிந்த இசைவல்லான் ஒருவன் இனிய பண்ணால் வயப்படுத்துகிறான். அவனே வஞ்சகம் நிறைந்த கபடன். இசையறிமாவை இசையால் மயக்கி, வல்லோசையால் வீழச் செய்கிறான். பரிதாபத்திற்குரிய அசுணம் அந்த கபடனின் கானத்தில் திளைத்து, கடூர ஒலி கேட்டு மடிகிறது. அப்படித்தான் உன் எழில் நலங் கண்டு வஞ்சிக்கத் துணிந்த தலைவன், தன் எழில் உருவத்தால் உன்னோடு களவொழுக்கங் கொண்டான். காதல் அன்பைப் பொழிந்தான். பின்னைப் பிரிந்தான். கொடுத்த அழகோடு, இன்பத்தோடு—இருந்த அழகையும், இன்பத்தையும், அமைதியையும் கொண்டு சென்றுவிட்டான். அதோடு விட்டானா? பசலை நோயையும், துயரத்தையும் அல்லவா தூவிச் சென்று விட்டான்! இதை நீ உணராமல் இருக்கிறாய்!' மனக்குரல் பெருமூச்செறிந்தது.

'அசுணமல்ல நான்...!' மனம் குமைந்தது.

'தெரியும் எனக்கு. உன் தலைவன் உன்னை வஞ்சித்தான்.' குரல் சொல்லிற்று.

'இல்லை. திரும்பவும் வருவார்! கட்டாயம் வருவார்!' மனம் துடித்தது.

'வரும் வரையில்...! நீ அவன் வாழும் ஊருக்குச் சென்று திரும்பினாய் அல்லவா? உன் உணர்வுகள் அந்த 'மென்தோள் நெகிழ்த்தானை' தேடிச் சென்று துயருற்றது உண்மைதானே! தலைவன் ஏமாற்றியது மறுக்கவொண்ணாதது அல்லவா?' குரல் வாதமிட்டது.

மனத்தில் அமைதி. தலைவனின் தண்ணிய தோற்றம் தெரிந்தது.

'உண்மைதான்!' இதயம் முணுமுணுத்தது.

கலித்தொகை இக்காட்சியை நமக்குத் தருகிறது. தலைவியின் துயரம் அளவிடற்பாலது. அப்பாடலைக் காணுவோம்.

"மறையிற்றன் யாழ்கேட்ட
மானை யருளா
தறைகொன்று மற்றதன்
ஆருயி ரெஞ்சப்
பறையறைந் தாங்கொருவன்
நீத்தான் அவனை
அறைநவ நாட்டினீர்
கொண்டுதரின் யானும்
நிறையுடையே னாகுவேன்
மன்ற மறையினென்
மென்தோள் நெகிழ்த்தானை
மேஎய் அவனுங்கண்
சென்றுசேட் பட்டதென்
னெஞ்சு."

(கலித்தொகை)

காதலன் பிரிவால் காதலி வருந்துகிறாள். அவள் நினைவுகளோ பிரிவுத் துயர் சுடுகிறது. தலைவனோடு கூடியிருந்த காலம் நினைவுக்கு வருகிறது. இனிய நிகழ்ச்சிகளின் உணர்வுகள் கொப்பளிக்கின்றன. வசந்தத்தின் சுகந்தம் அவள் மனத்தை கப்புகிறது. அவன் தொட்ட இடமெல்லாம் சிலிர்க்கிறது. கனவு மயக்கம் சூழ்கிறது. குளிர்சாந்தும், சீதள மாலையும் அணிந்த செவ்விய வலிமையுடைய தலைவனின் மார்பு தோற்றுகிறது. அவன் மேனியின் எழிலில் அந்த மார்புக்குத் தான் எத்தனை செல்வாக்கு? அவளை அன்பொழுக தழுவிய தலைவனின் மார்பு அவளின் நெஞ்சில் திகழ்கிறது. அற்றை நாளைய நினைவுகள் புகைப்படலம் போன்று குபுகுபுவென்று குமைகின்றன. அவள் மனம் புல்லரிக்கிறது. மேனி பசலை மறக்கிறது. தலைவனின் பிரிவை மறக்கிறாள். கூடல் நினைவு பிரிவை மறக்கடிக்கிறது.

நினைவுகள் மாறுகின்றன. நிகழ்கால பிரிவு வதைக்கிறது. அவளின் நெஞ்சம் திணறுகிறது. தலைவனின் அன்பு உறவுகள் எத்தனை சக்தி வாய்ந்தவை? துயரத்திலும் மெல்லிய இனிய நாதத்தை அவள் உள் பாய்ச்சுகிறது. மகிழ்ச்சியை மார்தச் செய்கிறது. அதே நினைவு இன்பம் தான் அவளுக்குத் துயரையும் தருகிறது. எந்த தண்ணிய திறந்த மார்பில் தவழ்ந்து துயின்றாளோ, இன்பந் துய்த்தாளோ அதே மார்புதான்

— 7-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 12—4—58 ‖ இதழ் 39

"தமிழே உனக்கென்ன வாழ்வு ?"

இலங்கையில் அவதிப்படும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்துக் கட்டுவதற்கு ஏதாவது ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நெடு நாட்களாக இலங்கை அரசு முனைந்து வருகிறது என்பதைத் தாய் நாட்டுத் தமிழர்கள் நன்கறிவார்கள். பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்குத் தாங்கொணுத் துயரத்தைக் கொடுத்துக்கொண்டி ஜான் கொத்தலவாலை, அதற்காக இப்போது ஒரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கிறார். உலகத்திலுள்ள பெரும்பாலான அரசியல் தலைவர்கள், தாங்கள் துறவு நிலைக்கு இழுத்து வரப் போகும் போதுதான் மனதிலே புதையுண்டு கிடக்கும் உண்மையைக்கொட்டிவிட்டுப் போகிறார்கள்.

ஜான் கொத்தலவாலை அரசியலுக்கு முழுக்குப் போடும்போது சிங்களவர்களுக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் மகிழ்ச்சியும் உணர்ச்சியும் தரக்கூடிய யோசனையொன்றைத் தெரிவித்துப் போயிருக்கிறார்.

'வரலாறு திரும்பத் திரும்ப நிகழ்வதுபோல் எதிர்காலத்தில் மலைநாட்டுத் தமிழர் பிரச்சினைக்கும் ஒரு முடிவு வந்தே தீர வேண்டும். அதாவது தமது தோட்டங்களில் வேலை பார்ப்பதற்காக டச்சுக்காரர்களால் இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட இந்தியர்கள், இன்று இலங்கையின் தேசபக்தி மிகுந்த சிங்களவர்களாக மாறியிருப்பதுபோல் ஆங்கிலேயர் கொண்டு வந்த இந்தியரையும் காலவரையில் அவ்வாறு மாற்றிவிடுவதுதான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ள வழியாகும்"

—கொத்தலை வெளியிட்டுள்ள கருத்துரை இது. தமிழை ஒழித்துத் தமிழர்களின் இன உணர்ச்சியை மங்க வைக்கவும், அவர்களை எந்த வகையிலேனும் உரிமையற்றவர்களாகச் செய்துவிடவும் எண்ணி வந்த சிங்களத் தலைவரின் உள் எண்ணம் இன்று அம்பலாகி விட்டது. இத்தனை காலமும் ஒளித்து மறைத்து வைத்திருந்த எண்ணத்தை சென்ற வாரம் அவர் வெளியிடக் காரணம் என்ன ? 'இந்தியப் பேரரசு' என்ற விசித்திரமான மகுடத்தைப் பெற்றிருக்கும் நேரு சர்க்கார் தமிழர்களுக்கு இனி ஒருபோதும் இரங்காது என்ற தீர்க்கமான முடிவுக்கு சிங்களவர்கள் வந்துவிட்டார்கள். அதிகாரம் மிகுந்த பதவியில் இருக்கும்போது சொல்லாத கருத்தை காவியையும் கமண்டலத்தையும் கையிலேந்தி நிற்கும் காலத்தில், கொத்தலவாலை கூறுகிறார் என்றால், இப்போதுதான் அவர்கள் இந்திய சர்க்காரின்மீது வைத்திருந்த அச்சத்தை போக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை.

இதர மொழி பேசும் மக்களையும் சிங்களவர்களாக்கி இலங்கையை ஒரு சர்வ சிங்கள நாடாக்க நினைப்பதே சிங்கள வெறியர்கள் அனைவருடைய கபட ஆசையாகும். இலங்கையின் பிரஜையாக சிங்களவர்கள் தான் இருக்கலாம், தமிழ் பேசும் மக்களுக்கு இடமில்லை என்ற முடிவை அதிகாரப் பூர்வமாகப் பிரகடனப்படுத்தும் காலக் கட்டத்திற்கு அவர்கள் வந்துவிட்டார்கள் என்பதைத்தான் கொத்தலவாலையின் பேச்சு நமக்கு உணர்த்துகிறது. இல்லாவிட்டால் "தமிழ உனககென்ன வாழ்வு" என்ற ஆணவத் தொனியில் அவர் பேச்சு அமையுமா ?

அனைவரையும் கட்டிக் காப்பதாகப் பேசிவரும் இந்திய அரசாங்கம் இதற்கென்ன செய்யப் போகிறது ?

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

தாழம்பூ கொண்டையை அடைக்கவே உதவும். பெண்கள் விரும்பும் உயரிய மணம் தாழம்பூவில் கிடைக்காது; மகிழம்பூவே அதனை நல்கும்.

கடலைப் பார்த்தோம்; அதன் அருகே மணல் ஊற்றைப் பார்த்தோம். பெரிய கடல்! சிறிய ஊற்று! பெரிய கடலைவிடச் சிறிய ஊற்று மனிதருக்குக் குடிக்கப் பயன்படுவதைக் கண்டோம்.

தாழை மடல் பெரிது! எனினும் சிறிய மகிழம்பூவின் கந்தம் – வாசனை இனிது. தாழம்பூவைவிட மகிழம்பூவையே விரும்புவர் மாந்தர்.

ஆகவே உருவத்தைக் கண்டு மதிப்புப் போடாதே என்று எச்சரிக்கிறார் ஔவைப்பாட்டி. "உடல் சிறியர் என்றிருக்க வேண்டா" என்பது மூதுரை வரி. உடலைப் பார்த்துச் சிறிய மனிதன், பெரிய மனிதன் என்று மதிப்புப் போடாதே!

"ஆளைப் பார்த்து மயங்காதே ஊது காமாலை" என்று சொல்வதுண்டு. உருவத்தில் பெரியவர்களாக, வெற்று ஆரவாரங்களோடு இருப்பவர்கள் பண்பு நலத்தில், பிறருக்குப் பயன்படுவதில், மிக மிகச் சிறியவர்களாக, உதவாக்கரைகளாகவும் இருப்பார்கள். அடக்கமாக இருப்பவர்கள், சிறியவர்கள்போல் காணப்படுவர்கள் உள்ளத்தால் பெரியவர்களாக, உயர்ந்த குண நலம் படைத்தவர்களாக, உலகுக்குப் பயன்படுபவர்களாக இருக்கக் கூடும்.

ஆகவே ஆளைப் பார்த்து, வெளித் தோற்றத்தைக்கண்டு எடைபோடக் கூடாது. அப்படி எடை போட்டால் நாம் ஏமாந்துவிடுவோம்.

பரந்து விரிந்த கடல் குளிக்கவோ, குடிக்கவோ, உடல் கழுவவோ பயன்படாததுபோல உருவத்தால் வெளிப்பகட்டால் பெரியவர்களாகக் காட்சியளிக்கிறவர்கள், உலகுக்கு ஒரு காசுக்குக்கூடப் பயன்படாதவர்களாக இருப்பதும் உண்டு.

கடலின் அருகே தோண்டப்படும் கையகலச் சிறிய ஊற்று, உண்ணுகின்ற நீரை உதவுவதுபோல, உருவத்தால் சிறியவர்களாக, கண்ணுக்குத் தெரியாமல் அடங்கியொடுங்கி இருப்பவர்கள் பெருநன்மையை விளைவித்தலும் கூடும்.

பெரிய தாழம்பூ இனிய மணத்தில் சிறிய மகிழம்பூவிடம் தோற்றுவிடுகிறது. அதுபோலப் பெரிய உருவம் படைத்தவர்கள், உள்ள விரிவில், அடக்கமான உருவம் கொண்டவர்களிடம் தோற்றுவிடுவதும் இயல்பே.

மூதுரை நமக்குச் சொல்கிற நீதி என்ன ? வெளித்தோற்றம் முக்கியமன்று; உள்ள விரிவே, பண்பு நலமே, பிறருக்குப் பயன்படும் தன்மையே முக்கியம்.

கடல்போன்ற பெரிய தோற்றம் வேண்டாம். தாழம்பூ போன்ற பெரிய இதழ் வேண்டாம். சிறிய நீரூற்று வழங்குகின்ற குடிநீரின் பயனும், சிறிய மகிழம்பூ நல்குகின்ற நறுமணமும் நம் பண்பிலே மிளிரவேண்டும்.

பெரிய உருவம் வேண்டியதில்லை. பெரிய உள்ளமே வேண்டும். வெளிப்பகட்டை விரும்போம்; உள்ளொளியையே விரும்புவோம்.

★

(மலாயா வானொலி தமிழ்ப்பள்ளிக் கூடப் பகுதியில் 7-3-58 அன்று ஒலிபரப்பப்பட்டது.)

★ ★ ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

"தென்னாட்டில் கிணறுகள் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. இதுபோல் எத்தனையோ சோம்பேறித்தனங்கள். அதைச் சரி செய்தால் அங்கே பஞ்சம் வரக் காரணமில்லை" என்றார். இவ்வாறு விவசாயத்தைப்பற்றி பண்டித ஜவகர்லால் நேரு தவருகப் பேசுவது அவரது பலவீனங்களில் ஒன்று என்பது என் கருத்து.

மத்திய சர்க்கார் விவகாரங்களை முன்னைப்போல் பத்திரிகைகளில் மூலம் படித்துக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் அருகிலிருந்தே பார்க்கிறேன். பயங்கரமாக இருக்கிறது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் உருப்பினர்கள்கூட இதை உணருகிறார்கள். மனம் விட்டுக்கூட என்னிடம் பலர் சொல்லியிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்று நினைக்கிறவர்கள்தான் அங்கு தலை நிமிர்ந்து இருக்கிறார்கள். காமராசர் தயவால் வந்தோம், நமக்கு 'சீட்' கிடைத்ததே பெரிது என்று கருதுகிறவர்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுதானிருக்க வேண்டும்.

★

[9-4-58ம்தேதி சென்னை எழும்பூரில் சொற் செல்வர் ஈ. வி. கே. சம்பத் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி.]

கா. அப்பாதுரையாரின் அன்னையார் மறைவு

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் அன்னையார் முத்தம்மாள் அவர்கள் தமது 74-வது வயதில் 6-4-58 பிற்பகல் 2-30 மணியளவில், மண்ணடி புதுத் தெரு, அப்பாதுரையார் அவர்களது இளவலது இல்லத்தில் இயற்கையெய்தினர் என்ற செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்.

அன்னையாரின் மறைவால் வாடும் பன்மொழிப் புலவர் அவர்களுக்கும், அவரது இரு இளவல்களுக்கும், இதர குடும்பத்தார்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.

—ஆசிரியர்.

குஞ்சரத்தின் கதை

8

மான்கொம்பும் ஜமீன்தாரும் அந்தக் கிராமத்திற்குப் போய்ச் சேரும்போது கரிச்சான் கதற ஆரம்பித்துவிட்டது. அந்த ஊர் குடியானவர்களுக்கு, ஒருவார காலமாக அவர்களுடைய கிராமத்திற்கு புதியவர்கள் வருவதும் போவதும் புதிராக இருந்தது. காங்கேயத்து மாடுகள் பூட்டிய வில்வண்டியில் ஜவ்வாதுப் பொட்டு வைத்த ஆசாமியும், செம்மறியாட்டுக் கொம்புகளைப்போல் சுருண்டு வளைந்த மீசையுடைய பேர்வழியும் வந்துபோவதைப் பற்றி அவர்கள் சிந்தித்த தாகவே தெரியவில்லை.

ஜமீன்தார் வண்டியை விட்டு இறங்கிப் போய் அந்த வீட்டின் கதவைத் தட்டினார். அல்லி கதவைத் திறந்தான். கண்ணம்மா பிரம்புப் பாயில் ஒருக்கணித்துப் படுத்திருந்தாள். ஜமீன்தாருக்குப் பின்னே மான்கொம்பு வருவதை அல்லி கவனித்தான்.

‘‘அல்லி!’’

‘‘எசமான்’’

‘‘அய்யா சொல்றது உண்மை தானா? குஞ்சரம் எங்கே?’’

‘‘இருட்டிலே ஆள் தெரியல்லீங்க’’—அல்லியின் தவறு, மான்கொம்புக்கு ஆத்திரத்தைக் கொடுத்தாலும், அவன் தனக்காக அனுபவித்த துயரத்தை மான்கொம்பு எண்ணிப் பார்க்காமலில்லை.

பேசிக்கொண்டே மான்கொம்பு ஜமீன்தாரைப் பின்தொடர்ந்தான். கைபடாத மல்லிகையென கண்ணம்மா சுருண்டு கிடந்தாள். மாட்டுத்தாவணிக்கு வந்திருக்கும் வியாபாரிகளைப்போல் அவர்கள் இருவரும் கண்ணம்மாவை ஏற இறங்கப் பார்த்தார்கள். அவர்களது குரல் கேட்டு அவளும் விழித்துக்கொண்டாள். பீதியடைந்திருக்கும் கோழை நெஞ்சங்களுக்கும், பிறர் பொருளை அபகரிக்கத் திட்டமிடும் திருட்டு உள்ளங்களுக்கும் சிறு அரவம்கூட பேரொலியாகப் படும் போலும்!

கண்ணம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தாள்! கன்னிப்பெண்ணல்லவா அவள்! மருண்ட மானுக்கும், வெருண்ட கன்றுக்கும் இருதயம் துடிக்கும் என்பார்கள். ஆனால் கண்ணம்மாவுக்கு இருதயம் துடிக்கவில்லை. காற்றாடியாய்ச் சுழன்றது. படுக்கையை விட்டு எழுந்து கல்தூண் மறைவுக்குப் போனாள்.

முரடர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. முரடனுக்குக் காரணம் இல்லாமல் இரக்கம் பிறக்கிறது, காரணமில்லாமல் கோபம் வருகிறது. சிரிக்கும் மழலையைச் சிதைக்க நினைக்கிறான். ஆடும் மயிலை நெறிக்கத் துடிக்கிறான். பொல்லாதவன் இந்த ரகத்தைச் சேர்ந்தவனல்ல. கோபம் வரவேண்டிய கட்டத்தில்தான் பொல்லாதவனுக்குக் கோபம் வருகிறது. ஆனால், வந்த கோபத்தை ஜீரணித்துக்கொள்ளக் கூடிய சக்தி பொல்லாதவனிடத்தில் இல்லை. கொதிக்கிறான். பழிவாங்கத் துடிக்கிறான். மான்கொம்பு பொல்லாதவன் வகையைச் சேர்ந்தவனே தவிர, முரடன் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. அதனால்தான் கலங்கி நிற்கும் கண்ணம்மாவிடம் அவனுக்கு ஆத்திரம் பிறக்கவில்லை. அல்லியை அழைத்துக்கொண்டு வெளியிலே வந்தான். இருவரும் வெகுநேரம் வரை மவுனமாக இருந்தார்கள். முதலில் மான்கொம்பு பேசினான்.

‘‘யார் பெற்ற மகளோ! பெற்ற வயிறு என்ன பாடுபடுகிறதோ?’’– மான்கொம்பு ஆரம்பித்தான்.

‘‘நான் எல்லாவற்றையும் விசாரித்துவிட்டேன். கண்ணம்மா அபலை அல்ல; ஆதரவற்றவளுமல்ல. நல்ல இடத்திலே பிறந்தவள்தான். பெற்றோர்கள் இருக்கிறார்கள்.’’ – அல்லி பதில் கூறினான்.

‘‘நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு பிரான்மலைக் கோயிலுக்குள் என்ன வேலை?’’

‘‘கண்ணம்மா பஞ்சவர்ணத்தின் காதலி! மூன்று மாதங்களுக்குமுன் **சிறுகூடல்பட்டி**யிலிருந்து கடத்திக் கொண்டுவரப்பட்டவள்.’’

‘‘அப்படியானால் நீ தூக்கிவரும்போது குஞ்சரமும், பஞ்சவர்ணமும் இருந்தார்களா?’’

‘‘யார் யாரோ வரிசையாகத் தூங்கினார்கள். அடுப்பு, சட்டிமுட்டிகள் கூட அங்கே தட்டுப்பட்டன. அங்கே ஒரு இருட்டு மண்டபம் இருக்கிறது. ஒரு சிறு திரிவிளக்கை வைத்துக்கொண்டு மூன்று மாதங்களாக கண்ணம்மா வசித்து வந்திருக்கிறாள். பஞ்சவர்ணம் பிரான்மலையைச் சேர்ந்தவன். அவனுக்கும் கண்ணம்மாவுக்கும் சிறுகூடற்பட்டி **அழகு நாச்சியம்மன்** கோயில் பாற்குடத் திருவிழாவின்போது தொடர்பு ஏற்பட்டதாம். அதிலிருந்து இருவரும் அடிக்கடி சந்திப்பார்களாம். திடீரென்று ஒரு நாள் இரவு பஞ்சவர்ணம் கண்ணம்மாவின் திருமணச் சேதி கேட்டு சிறுகூடற்பட்டி போய் தூக்கிவந்துவிட்டானும். கண்ணம்மாவின் தந்தை புகழ்பெற்ற நாதசுரக் கலைஞராம். பாவம்! குஞ்சரம் தனது வாழ்க்கைக்கு எதிரியாக வந்துவிட்டதை நினைத்து நினைத்துச் சாகிறாள் கண்ணம்மா. இரண்டு தினங்களுக்குள் அவள் முகம் கருத்துவிட்டது.’’—மான்கொம்பு கதையை இதற்குமேல் சொல்ல விடவில்லை. அவன் கண்கள் சிவந்துவிட்டன. நீர் அரும்பி நின்றது. கஷ்டப்படும் பெண்கள் எல்லாம் அவனுக்கு அவனுடைய மகளாகவே தோன்றினார்கள்.

‘‘அல்லி, நீ அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கூறு. நான் ஒருபோதும் கண்ணம்மாவைக் கலங்க விடமாட்டேன். இன்று இரவு கண்ணம்மாவை இளையாத்தக்குடிக்குக் கொண்டு போய் விடுவோம். அங்கே ஜமீன்தார் மாளிகையில் கண்ணம்மா இருக்கட்டும்’’ என்று கூறி அல்லியை உள்ளே அனுப்பினான்.

வண்டி இளையாத்தக்குடிக்குத் திரும்பியது. தேம்பிக் கசங்கிய கண்களோடு கண்ணம்மா — சூம்பிய உள்ளத்தோடு ஜமீன்தார்—ரத்தக் கண்களோடு மான்கொம்பு—சித்தங் குழம்பியபடி அல்லி — இத்தனை பேரையும் தாங்கிக் கொண்டு வண்டி கிளம்பியது.

★

பிரான்மலை என்ற ஊர் இராமனாதபுர மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் இருக்கிறது. அந்தச் சிற்றூர் இலக்கியத்திலே பேர்பெற்றது. முல்லைக்குத் தேரீந்த பாரி மன்னன் உலவிய பூமி. பிரான்மலை என்பது இடைக்காலத்திலே உருமாறி வந்த பெயரென்றும் அதன் இயற்பெயர் பரம்புமலை என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஊரில் வீடுகள் மலையடிவாரத்தில் இருக்கின்றன. மலையில் ஒரு கோயில் இருக்கிறது. கோயில் உயரந்திலிருப்பதால் அதிகமான போக்கு வரத்து யாருக்கும் இல்லை. வெளியூர்க்காரர்கள் வந்தால் போவார்கள். அவ்வளவு தொடர்பு உள்ளூர்க்காரர்களுக்கு இல்லை.

கோயிலுக்குக் கொல்லைப்புறமாகப் போனால் அடர்த்தியான புதர் ஒன்று வரும். அந்தப் புதர் மலைக்குகைக்குப் போகும் பாதை ஒன்றுக்குக் கெட்டியான மறைவாக இயற்கையிலேயே அமைந்திருந்தது.

குஞ்சரத்தைத் தூக்கிவந்த பஞ்சவர்ணம் அவளை அந்தக் குகையில்தான் வைத்திருந்தான். மூன்று மாதங்களாக அந்தக் குகைதான் அவனுக்கு மாளிகையாக இருந்தது. கண்ணம்மாவைச் சிறைப்பிடித்த நாளிலிருந்து அவன் அந்தக் குகையைவிட்டு அதிகமாக வெளியில் போவதில்லை. பகலெல்லாம் ஊருக்குள்ளிருப்பான். அந்தி பட்டதும் மலைக்கு வந்துவிடுவான்.

பஞ்சவர்ணம் நல்ல பாடகன். அவனது இனிய குரல் அவனுக்குத் துணைபுரிந்தது. ஒரு தடவை சிறுகூடற்பட்டியில் நடைபெற்ற பாற்குடத் திருவிழாவிற்குப் போயிருந்தபோதுதான் கண்ணம்மாவின் கடைக்கண்பார்வை அவனுக்குக்கிடைத்தது. அதிலிருந்து அவள் அவனுக்குக் கண்ணிலாடும் பாவையானாள். அவளுடைய எழில் அவனைக் கவர்ந்தது. அவனுடைய இசை அவளைப் பின்னியது.

கண்ணம்மாவுக்குத் திடீரென்று கல்யாணம் பேசினார்கள். அவள் கலங்கினாள். புலம்பினாள். பஞ்சவர்ணத்திற்கு சேதி சொல்லியனுப்ப வகை தெரியாமல் திண்டாடினாள். அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காதல் குடிகொண்ட நெஞ்சத்திற்கும், கவலை புகுந்த நெஞ்சத்திற்கும் அமைதியில்லை என்பதை அவள் அறிந்திருந்தும் ஏனோ படுக்கையைப் போட்டாள் தூங்குவதற்கு. அன்னை படுத்துவிட்டாள்; தந்தை சாய்ந்து கிடக்கிறார்; மகள் மட்டும் பொருமிக்கொண்டிருக்கலாமா? தமிழ்நாட்டுத் தாய்மார்கள், வீட்டிலிருக்கும் பருவப் பெண்கள் இரவில் வெகு நேரம் விழிப்பதை விரும்புவதில்லை. தங்களுக்கு தூக்கம் வந்துவிட்டாலும் மகள் படுக்கும் வரை அவர்கள் தூங்குவதுபோல் பாசாங்கு செய்வார்கள். யாரையும் ஏமாற்றிட நினைக்கும் துணிச்சல், பெண்களின் பருவத்திற்கு உண்டு என்பதை தாய்மார்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஏனெனில் அவர்களும் குமரிப் பெண்களாக இருந்தவர்களல்லவா?

விடிவதற்கு நான்கு நாழிகைகளுக்குமுன்பு கோடிச் சுவரை ‘டுப் டுப்’ என்று தட்டும் சத்தம் கேட்டது. தூங்காமல் கிடந்த கண்ணம்மாவுக்கு அந்த ஓசை நன்றாகக் கேட்டது. அவளுடைய ஆசைக் காதலன்தான் எப்போதும் சுவரைத் தட்டுவது வழக்கம். கண்ணம்மா எழுந்து வந்தாள். வழக்கத்திற்கு மாறாகக் கதவு பூட்டப்பட்டிருந்தது. பிரியமுள்ள அன்னையை அன்று இரவு கண்ணம்மா மனதுக்குள்ளேயே பொரிந்து தள்ளினாள். இன்று மட்டும் ஏன் அன்னை கதவை மூட வேண்டும்?

பெண்கள் எதையும் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. வெள்ளத்தையும் அடக்கிக்கொள்வார்கள்; வெடிக்கும் எரிமலையையும் அடக்கிக்கொள்வார்கள். அவர்கள் துணிந்துவிட்டால் தன்னுடைய பலத்தின் எடையை ஆராய்ந்துகொண்டிருப்பதில்லை. காற்றுப் பட்டாலும் கன்னம் வாடக்கூடிய மெல்லிய பாவையர் கூட அந்த நேரத்தில் அரக்க வேலையைச் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்.

கதவு பூட்டியிருந்ததைக் கண்டதும் கண்ணம்மாவுக்கு உள்ளம் கொழுந்து விட்டு எரிந்தது. வெளியிலிருந்து ஓசை கேட்கக் கேட்க கண்ணம்மாவின் உள்ளத்தில் கனல் அதிகரித்துக் கொண்டே வந்தது. வெளியோசை நின்ற நேரம் பார்த்து, பலகணிக்குப் பக்கம் போய் அதன் கதவை மெதுவாகத் தட்டினாள். பஞ்சவர்ணம் பலகணிக்கருகில் வந்தான். இருவருக்கும் ஆசை அலைபோல் திரண்டெழுந்தது. கட்டித் தழுவ துடித்தார்கள். இடையிலே கெட்டியான இரும்புக் கம்பிகளாலான பலகணி இருந்தது. கம்பியை வளைத்துவிடத்தான் ஆசை! இயலுமா? உதவிசெய்ய முடியாதபோது இரக்கம் பிறப்பதும், வலுவில்லாதபோது வீரம் பிறப்பதும் பயன்படுவதில்லை.

சேவல் கூவி விட்டது. நெடுநாட்களுக்கு முன்பு, திருடர்கள் கண்ணம்மாவின் வீட்டில் ஓட்டைப் பிரித்துக் கொண்டு உள்ளே வந்து கொள்ளையடித்த சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அதுபோல் செய்யத் தன்னுடைய காதலனுக்கு தைரியம் உண்டா என்று கூட அவள் நினைத்துப் பார்க்கவில்லை.

‘‘அத்தான் வழி கண்டேன்’’ என்றாள்.

‘‘செத்து மடிவதற்கா?’’ என்றான் குமரன்.

‘‘கூரை ஓட்டைப் பிரித்துப் போடுங்கள். அதன் வழியாக வந்து விடுகிறேன்’’ என்றாள்.

பொழுது புலர்ந்தது. வீட்டில் இருந்த அன்னையும் பிதாவும் ஆளாய்ப் பறந்தார்கள்.

– தொடரும் –

ஏப்ரல் 15 முதல் வெளிவருகிறது

ஆணித்தரமான அரசியல் கட்டுரைகள், சுவையான சிறுகதைகள், இலக்கிய விமர்சனங்கள், தாயகத்தின் பண்பாட்டை விளக்கிடும் ஏடாய், சினிமாச் செய்திகளோடும் திங்கள் இருமுறை பவனி வரும்.

“வெற்றி முரசு”

ஆசிரியர்: கோவை பா. நடராசன்

தனி இதழ் அணா 2 — ஆண்டுச் சந்தா ரூ. 3-50.

பிரதி 1-க்கு 4 அணா முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை.

விபரங்களுக்கு:— வெற்றி முரசு,

21/41, சித்தி விநயகர் கோவில் வீதி, கோவை.

அத்திப் பழம்

மா. கி. தசரதன் எம்.ஏ

அதற்குப்பின் பலமுறை விடுதிக்கே போய்வரத் தொடங்கினான். அவன் விடுதிக்கு வந்து போனால் யார், உனக்கு என்ன உறவா? நட்பா? எப்படி? என்று ஏதேதோ கேட்டு மாணவர்கள் ஞானசம்பந்தனை நச்சரித்தனர். அதனால் அவன் அருணாசலத்திடமும், அமுதவல்லியிடமும் எந்தக் காரணத்தைச் சொல்லிக்கொண்டும் அருணாசலம் மாணவர்விடுதிக்கு வரக்கூடாது என்று ஞானசம்பந்தன் கட்டளையே பிறப்பித்திருந்தான்.

அதை எண்ணித்தான் அமுதவல்லி எங்காவது போய்த் தொலைந்தால் தேவலை. 'அங்கே' போகாமலிருக்க வேண்டுமே என வேண்டிக்கிடந்தாள்.

இவள் என்ன நடக்கக்கூடாது என்று நடுங்கிக் கிடந்தாளோ அது அங்கே நடந்தது. பணம் தேடிச் சென்ற அருணாசலம் நேரே மாணவர் விடுதி நோக்கித்தான் சென்றான். ஞானசம்பந்தனின் அறைக்கு முன்னே வந்து நின்றபோது ஞானசம்பந்தனுடன் வயது நிரம்பிய ஒருவர் கோபமாக உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு கொஞ்சம் ஒதுங்கி நின்று உற்றுக் கேட்டான். 'முடிவாக நீ என்னதான் சொல்லுகின்றாய்?' என்று அந்தப் பெரியவர் கேட்டார்.

"அதுதான் சொல்லிவிட்டேனே அப்பா" என்றான் ஞானசம்பந்தன்.

'ஓ, வந்திருக்கின்றவர் ஞானசம்பந்தனின் தந்தையா - நம்முடைய சம்பந்தி' என்று எண்ணினான் அருணாசலம். 'அதுதான் சொல்லிவிட்டேன்' என்கிறானே என்ன சொல்லிவிட்டான். எதைப் பற்றிச் சொல்லிவிட்டான் என்று எண்ணினான். ஒன்றும் விளங்கவில்லை. எதைப் பற்றியாவது சொல்லட்டுமே நமக்கென்ன—இப்போது நமக்கு ஏதாவது கொடுத்தால் சரிதான் என்று எண்ணினான். ஞானசம்பந்தனின் பார்வையைத் தன் பக்கமாகத் திருப்புவதற்காக இருமுறை கனைத்தான்; ஒருமுறை இருமினான். ஞானசம்பந்தன் திரும்பிப் பார்த்தான். அன்று இரண்டாம் முறையாக அவன் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டான்.

திடும் என வெளியில் வந்து "என்ன ?" என்றான் கோபமாக.

"ஒரு முக்கியமான வேலை."

"அதற்குப் பணம் வேண்டும் அவ்வளவுதானே."

"ஹீ...ஹீ"

"என்ன இளிப்பு. இப்போது இல்லை."

"அப்படிச் சொன்னால்..."

"பின் ?"

"எப்படியாவது கொடுத்..." அவன் முடிக்கும் முன்னமே ஞானசம்பந்தன் அவன் கைகளைப்பற்றி இழுத்துக்கொண்டு அப்பால் போனான்.

"உன்னை இங்கெல்லாம் வர வேண்டாம் என்று சொன்னேனா இல்லையா ?"

"ஆமாம். நிரம்ப அவசரம்."

"பொல்லாத அவசரம்" என்று அவனைக் கடிந்து கொண்டான். ஆனால் மறுகணமே இவனை இப்போது கடிந்து கொண்டு ஆவது ஒன்றுமில்லை. எப்படியாது அனுப்பினால்தான் நல்லது என்று தீர்மானித்தான். எங்கோ ஒரு ஐந்து ரூபாய் வாங்கிக் கொடுத்து 'மாலை வருகிறேன்' என்ற சேதியையும் சொல்லி அவனை அனுப்பிவிட்டு அறைக்கு வந்தான்.

அவன் வந்ததும் பெரியசாமி "யார் அவன்?" என்று கேட்டார்.

"தெரிந்தவன்'பா" என்று சொன்னான் ஞானசம்பந்தன்.

அதற்குமேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை; பெரியசாமியும் கேட்க விரும்பவில்லை. வேறு எதைப் பற்றியெல்லாமோ கேட்டார். பேச்சு எங்கெங்கோ சுற்றி வந்து ஞானசம்பந்தன் திருமணத்தை வந்து தொட்டது.

"இப்போதென்ன அதற்கு" என்று நீ சொன்னால் தீர்ந்துவிடுகின்றதா ? அங்கே உன் அம்மா இதே துடியாய்த் துடிக்கின்றாள். பெண்ணைப் பெற்றவர்கள் நான் நீ என்று நாள்தோறும் வந்தவாறு இருக்கிறார்கள் ; நீ என்னடா என்றால் இப்படிச் சொல்கிறாய்" என்று சலித்துக்கொண்டார்.

"நான் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லவில்லையே. ஆகட்டும் செய்துகொள்ளுகின்றேன். படிப்பு முடியட்டும் என்கிறேன் அவ்வளவுதானே."

"படிப்புக்கும் இதற்கும் என்ன இருக்கிறது ? திருமணம் முடிந்த பின் படியேன் யார் தடுக்கப் போகிறார்கள் ?" என்றார் பெரியசாமி.

பெரியசாமியும் சிவகாமியும் எப்படியும் இந்த ஆண்டு திருமணத்தை முடித்தே தீரவேண்டும் என்ற உறுதியுடன் இருந்தனர். அதனால்தான் பெரியசாமி விட்டுக்கொடாமல் பேசிக்கொண்டிருந்தார்.

இந்த விடைக்கு என்ன தடை சொல்வது என்று அறியாமல் ஞானசம்பந்தன் விழித்தான். ஒன்றும் விளங்கவில்லை அவனுக்கு. அப்போதைக்குத் தப்பித்துக்கொண்டால் போதும் என்று எண்ணினான். எதையாவது சொல்லி இந்தச் செய்தியை முடித்துவிட வேண்டும் என்று,

"இப்போ என்ன'பா. தை பிறக்கட்டுமே அதைப் பற்றிப் பேசுவோம்" என்றான்.

இதைக் கேட்டதும் பெரியசாமிக்கு ஒருவகையில் மகிழ்ச்சியாகவே இருந்தது. தை பிறந்த பின்பாவது செய்துகொள்ள இசைந்தானே என மனம் மகிழ்ந்தார்.

"சரி இதை உன் அம்மாவிடம் சொல்லி விடுகின்றேன். அப்போதுதான் அவள் நிம்மதியாக சோறும் நீரும் உண்பாள்" என்ற சொல்லி பெரியசாமி மகனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

தை பிறந்தது. எங்கும் இன்பம் பிறந்தது; எழில் விளங்கியது. அமுதவல்லிக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது, 'குவா குவா' என்றழுதது. அதன் அழுகையைக் கேட்டு அவளுக்கு மகிழ்ச்சி பிறந்தது. ஆனால் ஞானசம்பந்தனுக்கோ கவலை பிறந்தது மட்டுமல்ல, வளர்ந்தது.

மாத்தூரில் சிவகாமி அம்மாளுக்கு மகன் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது; திருமணச் செலவுக்குப் பணம் கடன் வாங்கியாக வேண்டுமே என்ற கவலை பெரியசாமியின் மனதிலே பிறந்தது.

பிறந்தது எதும் வளரும். இது இயற்கை நியதி. அந்த நியதிப்படி இங்கும் குறிப்பிடப்பட்ட எல்லாப் பிறப்புக்களும் வளரத் தொடங்கின.

தைத்திங்கள் வளர்ந்தது. அமுதவல்லியின் குழந்தையும், மகிழ்ச்சி வளர்ந்தது. சிவகாமி அம்மாளின் எண்ணமும், பெரியசாமியின் கவலையும் வளர்ந்தன. எங்கெங்கோ சென்றனர், திரும்பினர். இரண்டொரு இடங்களில் இரண்டொரு நாட்கள் தங்கி பெண்ணையும் பெற்றவர்களையும் ஆராய்ந்தனர், அணுகினர். ஏதோ ஒரு இடத்தில் அவர்கள் மனம் ஒத்துப் போயிற்று. உடனே வரும்படி ஞானசம்பந்தனுக்குக் கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தைப் படித்தபின் ஞானசம்பந்தனின் நெஞ்சத்தில் இருந்த கவலை போராட்டமாக வளர்ந்தது.

மலைவையாவூரில் ஒரு நிலக்கிழார் வீட்டில் பெண் பார்த்ததாகவும், அவர்கள் இணங்கியதாகவும் உடனே வந்து பிற செய்திகளையும் பேசிவிட்டுப் போகுமாறும் பெரியசாமி ஞானசம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதைப் படித்ததும் இன்னது செய்வது என்று அறியாமல் ஞானசம்பந்தன் குழம்பினான். என்னென்னவோ எண்ணினான். எந்த முடிவுக்கும் வர இயலாமல் அமைந்தான்.

ஒய்யார விலாஸ் மாடி ஏறியது எவ்வளவு பெரிய பிழை என்று உணர்ந்து உளம் நொந்தான். இப்போது நொந்து என்னபயன் நெருப்பில் கையை வைக்கும் முன்னே சுடுமே என்று அறிந்து கையை வைக்காமல் இருந்தால் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் முன்னே பின்னே எண்ணிப் பாராமல் இது செய்தால் இன்னது விளையுமே என்ற அறிவும் இல்லாமம் எதையாவது செய்தால் வருவதனை ஏற்றுத்தானே ஆக வேண்டும்? வருந்தி நொந்தால் வந்தது வழியிலேயே நின்றிடுதல் இல்லை.

ஒய்யார விலாஸ் மாடிப் படிகளை ஒவ்வொன்றாகக் கடக்கும் போதும் இதைப்பற்றியெல்லாம் எண்ணிப் பார்த்திருக்கலாம். அல்லது அமுதவல்லியோடு ஆடியும் பாடியும் மகிழ்ந்தபோதாவது 'அப்புறம்' என்று மனத்தைக் கேட்டிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறியவன் துன்பம் செந்தேளாகக் கொட்டியபோது சிந்தை வருந்தி நொந்தான்.

அமுதவல்லியும் அவள் கையில் அழுதும் சிரித்தும் விளையாடிய குழந்தையும் ஒரு பக்கத்தில் நாங்கள் என்ன ஆவது என்று கேட்டனர்.

மறு பக்கத்தில் தாயும் தந்தையும் நின்றுகொண்டு ஏக்கத்தோடு நோக்கினர்.

அமுதவல்லியின் பக்கம் அருணாசலத்தின் அச்சுறுத்தும் கண்கள் நின்றன.

பெற்றோர் மருங்கில் உற்றார் உறவினர் கூடி நின்றனர்.

எந்த வழி சென்று யாருடன் சேருவது என்று அறியாமல் குழம்பினான் ஞானசம்பந்தன். இரண்டு மூன்று நாட்கள் எங்கோ கனவுலகில் காற்றின் அணைப்பில் நடப்பவன்போல் உணர்ச்சியற்று நடந்தான்.

நான்காம் நாள் காலை மறுபடியும் ஒரு கடிதம் அப்பாவிடமிருந்து வந்துவிட்டது. அதில் சிவகாமி அம்மாள் சொன்னதாகவும் இரண்டு வரி இருந்தது. போய்த்தான் வர வேண்டும் என்று அவன் முடிவு கட்டியிருந்தபோது அருணாசலம் வந்து வாயிற்படி ஓரம் நின்றான்.

அவனைக் கண்டதும் ஞானசம்பந்தனின் மனம் மருண்டது. இத்தனை நாட்கள் அருணாசலத்தைக் கண்டு அஞ்சினவன் அல்லன். ஆனால் அன்று அருணாசலத்தைக் கண்டு அஞ்சினான்.

'ஏன் வந்தாய்' என்று கேட்டவன் 'என்ன செய்தி?' என்று அன்று கேட்டான்.

"என்ன சொல்வது? எல்லாம் அந்த மூதேவி சமாச்சாரம்தான். இரண்டு நாட்களாக நீ அந்தப் பக்கம் தலைகாட்டவில்லை. அது அழுது தொலைக்குது." என்றான் அவன்.

ஞானசம்பந்தன் நிமிர்ந்து நோக்கினான். நீங்கள் என்று அழைத்து வந்த அருணாசலம் நீ என்று அழைக்கின்றான்! இருக்கட்டும். என்று மனதிற்குள்ளேயே பொருமினான்.

"வருகிறேன்" என்றுசொல்லி கொஞ்சம் பொருளும்கொடுத்து அவனை அனுப்பிவிட்ட பின் ஞானசம்பந்தன் சிந்தனைக் கடலுள் மூழ்கினான்.

தொடரும்

உள்ளமும் உருவமும்!

பேரன்புமிக்க தமிழ்ச்செல்வங்களே!

இன்று உங்களைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறேன். உங்களில் பலர் போர்ட்டிக்சன் கடலில் குளித்திருப்பீர்கள். அது இயற்கை அமைத்துத் தந்த அருமையான நீச்சல் குளம். அங்கே கடல் தன் ஆட்டபாட்டத்தை வெளிக்காட்டாது அமைதியாக அடங்கிக் கிடக்கிறது. ஆகவே உல்லாசப் பயணம் செல்லும் யாரும் போர்டிக்சனை மறப்பதில்லை. மலாயாவுக்கு வருகின்ற வெளிநாட்டவர்களும் போர்ட்டிக்சன் கடலில் குளிக்காமல் திரும்பமாட்டார்கள்.

குளிப்பதற்குச் சிறந்த இடமாகப் போர்ட்டிக்சன் கடல் விளங்குவது போலக் கண்டு மகிழ்வதற்கு அழகிய கடற்கரையைத் தன்னகத்தே கொண்டு மலாக்கா நகரம் விளங்குகிறது. மலாக்காக் கடற்கரை வளப்பும் பெருமிதமும் பொருந்தியது,

கடல் விரிவானது. விரிவைக் குறிக்கக்கூட நாம் கடல் என்னும் சொல்லையே பயன்படுத்துகிறோம். ‘வீடு கடல் போன்றது’ என்று சொல்லும்போது அதன் பரப்பு பெரிதாயிருப்பதையே குறிக்கிறோம். கடலின் பயன்களைத் தம்பி தங்கைகளாகிய நீங்கள் அறிவீர்கள். கடலில் கிடைக்கும் மீன் உலக மக்களுக்கு முக்கியமான உணவு. கடலில் கிடைக்கும் பொருள்களை வரிசைப்படுத்த முடியுமா? அவற்றைச் சொல்வதானால் அது கடலை அளப்பதுபோலவே ஆகிவிடும்.

கடலில் கிடைக்கும் முத்து கடற்செல்வத்தில் தலைசிறந்தது. கடலில் குளித்தால் உடம்புக்கு நல்லது; தோல் பிணிகள் நீங்கும். கடற்காற்று நல்ல மருந்து. கடற்கரையோரங்களில் வாழும் மக்கள் இவ்வாய்ப்பை இழக்கமாட்டார்கள். கடலைப் பற்றி இவ்வளவு உரைத்த நான் ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! நாம் சோற்றுக்கு நாளும் போட்டுக்கொள்ளும் உப்பு கடலிலிருந்தே விளைகிறது. உப்பில்லாமல் உணவு ஏது? ஒவ்வொரு நாளும் உண்ணும்போது நாம் கடலை நினைத்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாதக் கணக்கில் கடற்பிரயாணம் செய்யக் கொடுத்துவைத்தவர்கள் பாக்கியசாலிகள்! விமானப் பயணம், மோட்டார்ப்பயணம், ரயில் பிரயாணமெல்லாம் கப்பல் பயணத்தின்முன் எம்மாத்திரம்? மணமான புதிதில் தேனிலவு கழிக்கும் தம்பதிகள் கடற்பயணத்தையே விரும்புவர். அது அவ்வளவு இன்பமயமானது.

கடலைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். கடல் என்னும் தலைப்புக் கொடுத்து உங்கள் ஆசிரியர் உங்களைக் கட்டுரை ஒன்று எழுதவும் சொல்லியிருப்பார். நீங்கள் பக்கக் கணக்கில் வரைந்து தள்ளியிருப்பீர்கள். இல்லையா?...

சரி. இப்பொழுது உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். கடலின் பெருமைகளையே இத்தனை நேரம் நாம் பேசினோம். அது அவ்வளவு பெரியது, எத்தனை விரிந்தது, கண்ணுக்கெட்டும் தொலையையும் தாண்டி வானத்தை முகடாகக்கொண்டு உலகையே சுற்றி வளைத்துப் பெருகி நிற்பது என்றெல்லாம் கண்டோம். இத்தனை அருமை பெருமை வாய்ந்த கடலினிடத்து ஏதேனும் குறையுண்டா? கடலை நினைக்கும்போது உங்கள் உள்ளத்தில் அதன் குறை ஏதும் ஊசலாடுகிறதா? நன்கு சிந்தனை செய்து பாருங்கள்.

கடலைப் பற்றிக் குறை சொல்ல வேண்டுமென்று கச்சை கட்டிக் கொண்டு எண்ணிப்பாருங்கள். ஏதாவது தட்டுப்படுகிறதா?

நம் தமிழ்ப் பாட்டி ஔவையாருக்குக் கடலின் குறை பளிச்சென்று புலனாகிவிடுகிறது. கடலைப் பற்றி நாம் அளந்ததெல்லாம் வெற்றுவேட்டாகப் போகும் அளவுக்குக் கடலின் ஒச்சத்தை - கையாலாகாத்தன்மையை ஔவையார் நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். அவர் சொன்னவுடன் நாமும் ‘ஆம் அவர் சொல்வது முற்றும் உண்மை’ என்று வழிமொழிகிறோம்.

அப்படிக் கடலினிடம் ஔவையார் காணுகின்ற குறைதான் என்ன?

“மாக்கடல், விரிந்த கடல், பரந்த கடல், உலகையே வளைத்து நிற்கும் கடல் என்றெல்லாம் அளக்கிறாயே, தம்பி, அந்தப் பெருங்கடலில் ஒரு நாளைக்கு நீ உன் உடம்பைக் கழுவ முடியுமா?” என்று ஔவை கேட்கிறார். சரியான கேள்வி. நாம் தலை குனிவதைத் தவிர எப்படிப் பதில் சொல்லமுடியும்?

‘குளிக்க முடியுமா?’ என்றுகூட அவர் கேட்கவில்லை. அது சற்று உயர்வான கேள்வி. அதனால் கடலின் தரம்கூட உயர்ந்துவிடும். ஆகவே விழிப்பாக ‘உன் உடம்பு அழுக்கைக் கழுவ முடியுமா கடல் நீரால்?’ என்று வினவுகிறார். ‘பாட்டி, உடம்பை என்ன, கை காலைக்கூடக் கழுவ முடியாது’ என்றே நாம் மாற்றம் கூறவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கடலில் குளிப்பது உடம்புக்கு நல்லது என்று முன்பு சொன்னேன். குழந்தைகளுக்கு இங்கே ஒருவேளை ஐயம் தோன்றலாம் அல்லவா? கடல் நீரில் குளிப்பது உடல் நலத்துக்கு ஏற்றதுதான். ஆனால் குளிப்பதில் நாம் நாடும் அடிப்படைப் பயனை அதாவது, உடலைக் கழுவும் பயனைக் கடற்குளியல் நல்காது.

கடலுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் தம்பிமார்கள் குளிக்கச் செல்வார்கள். கடலில் பொங்கிவரும் அலையினூடே ஆட்டம் போடுவார்கள். நீச்சல் திறமையெல்லாம் காட்டுவார்கள். குளித்துவிட்டு வெளியே வந்தால் உடம்பெல்லாம் ‘பிசுபிசு’ என்று உப்பு நீர் ஒட்டிக்கொண்டிருக்கும். தலை சிக்குப் பிடித்துவிடும். உடம்பில் அடிக்கும் வாடை வயிற்றைக் குமட்டும். கடலில் குளித்துவிட்டுக் கரையில் காலடி எடுத்துவைக்கும்போது இத்தனை சங்கடங்கள் நமக்குக் காத்திருக்கும். வீட்டுக்கு வந்து குழாய்த் தண்ணீரில் அரைமணி நேரமாவது சோப்புப் போட்டுக் குளித்தால்தான் நம் உடம்பு பழைய உடம்பாகும். அப்போதுகூடக் கடலில் குளித்த பிசுபிசுப்பு நீங்க இரண்டு மூன்று நாளாகும்.

ஆற்றில் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிவந்த கதைதான்!

நாம் குளிப்பது நம் உடல் அழுக்கைக் கழுவுவதற்கு. கடலில் போய்க் குளித்தால் மேற்கொண்டு புது அழுக்குத்தான் நம் உடம்பில் ஒட்டிக்கொள்ளும். அந்த அழுக்கைக் கழுவ மீண்டும் ஒருமுறை ஏன் இரண்டு முறை, வேறு நீரில் குளிக்க வேண்டும்.

‘கடல்நீர் நிறைந்தென்ன? காஞ்சிரை பழுத்தென்ன?’ என்னும் பழமொழி இதனால்தான் எழுந்தது போலும்!

“கடல் விண்ணையும் மண்ணையும் இணைத்துக்கொண்டிருந்து என்ன பயன்? கேவலம் கால் கை கழுவக் கூட அதன் நீர் உதவாது.”

கடலை மிக மிகச் சாதாரணமாக்கித் தாழ்த்திவிட்டார் ஔவையார்.

அவர் சொல்கிற மற்றொரு உண்மை கடலின் மானத்தைக் கூண்டோடு கரையேற்றிவிடுகிறது.

கடலையே விழித்த விழி மூடாமல் பார்த்துக்கொண்டிருக்கும் நம்மைக் கடற்கரை மணலுக்கு அழைக்கிறார் அவர். ‘தம்பி, பெரிய கடலைச் சற்று மறந்துவிட்டு, இங்கே மணலில் தோண்டியிருக்கிற சிறிய ஊற்றை வந்து பார்’ என்று அவர் குரல் கொடுப்பது நம் காதில் விழுகிறது. இரண்டு கை அகலம்தான். ஆழம் நம் முழங்கால் அளவுகூட இருக்காது. அங்கே தண்ணீர் ஊறிக் கொண்டிருக்கிறது. பால்போன்ற நீர்! அள்ளி அள்ளிக் குடிக்கலாம். குடிக்கக் குடிக்க இனிக்கும். அவ்வளவு பெரிய கடல் நம்தாகத்தைத் தணிக்கவில்லை. ஆனால் அதனருகே உள்ள இந்தச் சிறிய நீரூற்று நம் நீர் வேட்கையை நொடியில் போக்கிவிடுகிறது!

கடல் பெரிதாக இருந்து என்ன பயன்? அதன் நீர் குடிக்க உதவாது; குளிக்க உதவாது; உடம்பைக் கழுவக்கூட உதவாது.

கடற்கரை மணலில் தோண்டும் ஊற்று கடலோடு ஒப்பிடும்போது கடுகு; அதனினும் சிறிது. எனினும் அந்த ஊற்று நீரை நாம் பருகலாம்; உடல் குளிரும்; உள்ளமும் குளிரும்.

மூதுரைப் பாட்டு பெரிய கடலையும் சிறிய ஊற்றையும் ஒப்பிட்டுப் பேசுகிறது.

மடல் பெரிது தாழை
மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க
வேண்டா—கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது அதன்
அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்

கடலையும் கடலுக்கு அருகிருக்கும் ஊற்றையும் காட்டும் ஔவையார், மலர்களின் உலகத்திற்கும் நம்மை இட்டுச் செல்கிறார்.

தாழம்பூ, மகிழம்பூ இரண்டையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

தம்பி தங்கைகள் தாழம் பூவையும் மகிழம் பூவையும் பார்த்திருக்கக் கூடும். சிற்றூர்களில் உள்ளவர்களுக்குப் பூக்களைப் பார்க்க வாய்ப்புண்டு. பட்டணங்களில் வசிக்கின்றவர்கள் காகிதப் பூக்களையே ரசிக்க வேண்டியிருக்கிறது.

மல்லிகைப் பூவின் மணம் அருமை! அதன் வெண்மை நிறம் கண்ணுக்குக் கவர்ச்சி. மல்லிகைச் சரத்தைக் கொண்டையிலே முடித்துப் பார்த்தால் அதன் மேன்மை தெரியும். முல்லை, ரோஜா, மருக்கொழுந்து அனைத்துமே நறுமண மலர்கள். ஒற்றை ரோஜாவைப் பெண்கள் தங்கள் கூந்தலில் அழகாகச் செருகிக் கொள்வார்கள். இந்தியப் பிரதமர் நேருகூட நாள் தவறாமல் தன் சட்டையில் ஒரு ரோஜாவைக் குத்திக் கொள்கிறார்.

தாழம்பூவை :ஏழை எளியவர்கள் அணிகின்ற பூ. தாழம்பூ விலை மலிவு. அதன் இதழ் பெரிதாக இருப்பதால் சிறிது வாங்கினாலும் சடையையே மறைக்கும் அளவு அதனைச் சூடிக் கொள்ளலாம். ஆனால் அதன் வாசம் அதன் பெரிய மடலுக்கேற்ப அத்தனை உயர்ந்ததன்று.

மகிழம்பூவோ சிறிய மலர். தாழையோடு ஒப்பிடும்போது மிகவும் சிறியது. ஆனால் மகிழம்பூவின் மணமோ தாழம்பூவைத் தூக்கியடித்துவிடும். அவ்வளவு அருமையான இனிய மணம்!

பெரியது தாழம்பூ, ஆனால் அதன் மணமோ மிகச் சாதாரணம்; சிறியது மகிழம்பூ. எனினும் அதன் மணமோ அபாரம்!

மலர்களை நாம் விரும்புவது மணத்துக்காகவே. அழகு அடுத்த நிலை தான்.

மணமில்லாத கனகாம்பரமும் நீலாம்பரமும், காகிதப் பூக்களும் இப்போது மலிந்துவிட்டன. அதனால் நறுமணத்தின் பெருமையையே நாம் மறந்துவிட்டோம்.

கொண்டையை அடைப்பதற்காகப் பெண்கள் மலர் வாங்குவதில்லை.

— 3-ம் பக்கம் —

வெண்பாப் போட்டி-15.

ஈற்றடி :

நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

முடிவு தேதி 19-4-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

இப்பொழுது வாட்டுகிறது. 'அடிக்கும் கைதானே அணைப்பதும்?' அணைத்த மார்பே அவளை துயரத்தில் ஆழ்த்துகிறது. குளிர் நிலவும் கொதிப்பதில்லையா?

இன்பத்தையும் துன்பத்தையும் கலந்தளிக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை சித்தரிக்கலாம். காதலனோடு உறையும் போது மதியின் கதிர்கள் காதலியை மகிழ்விக்கின்றன. பிரிவின் போது எரிதழலாய் சுடுகிறது. இப்படிப் பல உவமைகள் காட்டியிருக்கலாம். நற்றிணைப் பாடல் ஒன்று வேறு வகையான நயம் மிகுந்த காட்சியை உவமையாக்குகிறது. அது இது:

அணிநலஞ் சிதைக்குமார்
பசலை அதனுல்
அசுணங் கொல்பவர்
கைபோல் நன்றும்
இன்பமுந் துன்பமும்
உடைத்தே
தண்கமழ் நறுந்தார்
விறலோன் மார்பே''
(நற்றிணை)

பிரச்சோதன மன்னன் அந்தப்புரத்தினுள் நுழைந்தான். துள்ளிக் குதித்து பேரொலி செய்துகொண்டிருந்த 'ஆரவாரம்' அரசனைக் கண்டதும் அடங்கி ஒடுங்கிப் போனது. தோழியர்கள் அரசியை விட்டு நீங்கினர். அரசி பெருந்தேவி மன்னனை பூரிப்புடன் வரவேற்ருள். அரசியின் முகத்தில் இனிய பனித்திரை விழுந்திருந்தது. சிரிப்பு சுந்தரவதனத்தை சூழ மன்னவனை எதிர்கொண்டாள்.

எதிர்பார்த்த மன்னவனின் முகத்தில் சோகத்திரை. மனத்தின் துயரம் முகத்தில் வடிந்தது. அரசியின் அன்புபொங்கும் அழைப்புஅவளைக் குழப்பியது. இனிய சுகந்த விரிப்பில் சஞ்சரித்து வந்த அரசி முட்கள் நிரம்பிய பாதையில் நடக்கலானுள். மனம் வெதும்பியது. பதட்டம் தலை தூக்கியது. அரசி துக்கித்தாள்.

பெருங் கதையில் ஆசிரியர் அரசியின் துயர் நிலையை இங்ஙனம் சித்தரிக்கிருர்.

''இசைகொள் சீறியா
ழின்னிசை கேட்ட
அசுணநன்மா வந்நிலைக்
கண்ணே
பறையொலி கேட்டுத்தன்
படிமறந்தது போல்
நீலத்தன்ன கோலத்
தடங்கண்''
(பெருங் கதை)

கம்பர், ராமாயணம் எழுதி முடித்தார். அவையடக்கம் எழுதலானுர். அவையடக்க வழக்கை மேற்கொண்டு கம்பர் பாடல் எழுதினுர். பலப்பல எண்ணங்கள் அவர் மனத்தை குழப்பின. தமிழகத்தின் தன்னிகரில்லா இலக்கியங்களை அறிந்து அனுபவித்தவர் அவர். தமிழினப் பண்பின் சிறப்பை உணர்ந்தவர். அருமை பெருமை மிகுந்த தொல்காப்பியர். வள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனுர், திருத்தக்க தேவர்போன்ற பெரும் மேதைகள் கம்பர் மனத்தில் காட்சியாகினர். கம்பர் ஒருகணம் திகைத்தார். அகமும் புறமும் அவர் நினைவில்உருப்பெற்றது. வடநாட்டு மன்னர்களின் மக்களின் அகமும் புறமும் அவர் மனத்தில் ராமாயணத்தை ஊடுருவினுர். மனத்தில் சஞ்சலத்தின் கூச்சல். ராமன் – ராவணனைப் பற்றிய உணர்வுகள் கம்பரை வதைத்தன. மிதிலையும் அயோத்தியும் அவரை கலக்கின. முக்கூடலும் தஞ்சையுமாக அந்நகரங்களை மாற்ற முயன்று தோல்வி கண்ட அவர் உள்ளம் நைந்தது. உண்மை சரக்கை எத்தனை புதுசட்டைகளால் போர்த்தினுலும் – உருவம் தெரியத்தானே செய்யும்! வடநாட்டுத் தினுசை மாற்றினுலும், அதன் குணம் எங்கேப் போகும்? வாலியை மறைந்திருந்து அடித்த ராமனின் வீரம்தான் என்னே? 'இன்றுபோய் நாளைவா' என்று ராவணனைக் கண்டு களத்தில் சொன்ன ராமன் தான் வாலியை ஒளிந்திருந்து கொன்ருன். இதனை எந்தக் கட்சிக் காரரும் தமிழ்மக்களிடையே எடுத்துச்சொல்வதில்லை – தி. மு. கழகத்தைத் தவிர! ஒன்றை மறைத்து ஒன்றை வெளிப்படுத்தும் குணம் படைத்த இலக்கிய விற்பன்னர்கள் தான் கட்சிக் கண்ணேட்டத்துடன் காவியங்களை கணிக்கக்கூடாது என்று கூப்பாடு போடுகின்றனர். வருங்காலத்தில் இப்படிப்பட்ட கூப்பாடு போடுவதற்கு பலர் முன் வருவார்கள் என்பதை கம்பர் அறிந்தார் போலும்!

அசுணத்தின் குண நலன்களை நன்கு ஆய்ந்தறிந்தவர் கம்பர். அவர் காலத்தில் அப்பிராணி இருந்ததோ இல்லையோ; அதனை அவர் தெளிவாக தெரிந்திருக்கிருர். தமிழர்களின் மென்மையான மனத்தை கம்பர் அறிந்தவர். 'அருமையான இலக்கியங்களை அனுபவித்தவர்கள் அல்லவா தமிழர்கள்? காதல், வீரம் இரண்டிற்கும் முதலிடம் கொடுத்து பண்பான வாழ்வு நடத்துபவர்கள் அல்லவா தமிழர்கள்? பண்பு மிகுந்த தமிழர்களிடம் எப்படி என்னுடைய காவியத்தை படைப்பேன்? அன்பும் உயரிய குணமும் வாய்த்த தமிழர்கள் என் ராமாயணத்தை ஏற்பரோ? யாழ் ஒலி கேட்டு மகிழ்ந்த செவிகளில் என் பாடல்கள் பறையடுத்தது போலும் என்பரோ?' 'யாழ் நறையடுத்த அசுண நன்மாச்செவி' அன்ன தமிழர்கள் முன்னே என் பாடல்கள் பறையோசை தானே? பறையொலி கேட்ட அசுணமாவரோ–எம்பாடல் கேட்ட தமிழர்?' என்றெல்லாம் கம்பர் கலங்குகிருர். அவையடக்கத்தில், வடநாட்டு ராமாயணத்தை தமிழாக்கிய கம்பர் அப்படி நினைத்ததில் தவறில்லை அல்லவா? அற்றைக்கே அவர் வருங்காலத்தை உணர்ந்தார். இற்றைக்கோ பலரும் ராமாயணத்தில் 'ராம அவதாரத்தின்' ரகஸ்யங்களை விளக்கி மகிழ்கின்றனர்.

கம்பர் தன் வருங்கால தீர்க்க தரிசன அறிவால் உணர்ந்துள்ளார். அசுணமாவின் உயரிய தன்மையோடு தமிழர்களின் உயரிய பண்பையும் விளக்குகிருர். அவர்பாடலை கவனியுங்கள்.

'துறை யடுத்த விருத்தத்
தொகைக் கவிக்கு
உறை யடுத்த செவிகளுக்கு
ஓதில், யாழ்
நறை யடுத்த அசுணநன்
மாச் செவிப்
பறை யடுத்தது போலும்
என்பவரே!'
(க. ராமாயணம்)

கொடிய ஒலியைக் கேட்கவே அஞ்சி உயிர் துறக்கும் உயர் பிராணி வாழ்ந்திருந்தது தமிழகத்தில், ஆனுல், கொடிய செயல்களை செய்வதிலும், அச்செயல்களை தூண்டி விடுவதிலுமே கருமமாய் உள்ள மனிதர்கள் உலகம் எங்கும் விரவி கிடக்கிருர்கள். அதியற்புதப் பிராணியான அசுணமாவை, இசையறிமா என்றும், கேகயப்புள் எனவும், யாழ்கேட்டமான் எனவும் பல பெயர்களால் புலவர் பெருமக்கள் வழங்கலாயினர். அசுணத்தின் வாழ்வை, பண்பை தமிழர்கள் அறிதல் அவசியம். இலக்கியங்களில் புதையுண்டு கிடக்கும் அசுணத்தின் உயரிய வாழ்வை தெறிதல் வேண்டும். மான உணர்வை இழுக்காக மதிக்கும் பல்லோர் இற்றை நாளில் இருக்கத்தான் செய்கின்றனர், அந்த இழிதகைமையாளர்களுக்கு அசுணமாவின் வாழ்வு பாடமாக அமையுமாக.

—வேலை. எஸ். எழில்

கருப்புக்கொடி வழக்கு-
சென்னை 33வது வட்ட
வளர்ச்சி-நிதிக்காக
14-4-58 திங்கள் மாலை
6 மணிக்கு
சென்னை ஒற்றைவாடை
கொட்டகையில்
அறிஞர் அண்ணு, M. L. A.
தலைமையில்
தோழர் வி. எஸ். கோவிந்தராசன்
நடிக்கும் உதய சூரியன் நாடக
மன்றத்தாரின்
''தந்தை தந்த தண்டனை''
எனும் நாடகம் நடைபெறும்.
கட்டணம்: ரூ. 3, 2, 1-25, 0-75

சிறுகூடல்பட்டி—நாடகம்

2-4-58ம் தேதி சிறுகூடல்பட்டி வ. உ. சி. படிப்பகத்தாரால் நடிகர் டி. ஆர். மகாலிங்கம் தலைமையில் 'மதி' நாடகம் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். தென்னரசு நடிகர்களைப் பாராட்டிப் பேசினுர். இறுதியில் திரு. மகாலிங்கம் அவர்கள் பாடிய 'திராவிடப் பொன்னுடு' என்ற பாடலோடு நாடகம் முடிவடைந்தது.

திருமணம்

2-4-58ம் தேதி திங்கட்கிழமை மாலை இராமனுதபுரம் மாவட்டம்-செல்வரசன் கோட்டையில், செல்வன் கார்மேகத்திற்கும் செல்வி மீனுளுக்கும் சீர்திருத்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. நடிகர் டி. ஆர். மகாலிங்கம் அவர்கள் மணவிழாவிற்குத் தலைமை வகித்தார். கல்லல் தோழர் கண்ணப்பா - வள்ளியப்பா மணமக்களை வாழ்த்திப் பேசினுர்.

வெண்பாப் போட்டி

14. கலைக்கும் கலையாக் கலை.

கன்னங் குழித்திடக் கொண்ட நற் புன்னகையும்
கன்னல் பழித்திடும் இன்னுரையும்—என்னில்
நிலைத்த எழிலும் கலைத்திடா நெஞ்சைக்
கலைக்கும் கலையாக் கலை.

—தா. அ. மாரிமுத்து, குருசாமிபாளையம்.

தண்ணவளின் தேன்மொழியில் தக்கதோர் மெல்லணையில்
அன்னவளின் அன்புறவில் ஆரெழிலில்—தென்றல்
அலைக்கும் குழலில் நிலைக்குமென் நெஞ்சைக்
கலைக்கும் கலையாக் கலை.

—செல்வியின் செல்வன், உடுமலை.

மின்னல் நகைகாட்டி மெல்ல நடைபயின்று
சின்ன விழிகாட்டிச் சீர்மழலை—தன்னால்
அலைக்கும், துயர்மாற்றும் ஆற்றலுடைச்சேய்தான்
கலைக்கும்;கலையாக் கலை.

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

அன்பு மலரும் அறிவு வளர்ந்துவரும்
துன்பமும் நீங்கிவிடும் சுந்தரியே!—இன்பம்
நிலைபெறும் தூய்மையாம் தாய்மொழியின் மாசைக்
கலைக்கும் கலையாக் கலை.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

மதுஊறு வாய்திறந்து மைந்தன் அழுதல்
எதுவெனக் கேட்கின்றாய்! பெண்ணே--அதுதான்
சிலையணங்குச் செம்பவளம் உன்னருந்தா லாட்டுக்
கலைக்கும் கலையாக் கலை.

—சேரலாதன், மணப்பாறை.

நாட்டின் நலன்காக்க நற்றமிழின் மாண்பேற்ற
வீட்டுக் கொருவீரர் வேலின்று—நாட்டில்
மலைக்காது போராடல் மங்கையுன் வண்ணக்
கலைக்கும் கலையாக் கலை.

—பாண்டியன், பிள்ளாபாளையம்.

மாண்பு மறநிலையு மின்பமும் பேரறிவுங்
காண்போர்க் களிக்குஞ் சினிமாதா—னீண்டு
நிலையாய்க் கலைகூறும் நேர்த்திமிகு பண்டைக்
கலைக்கும் கலையாக் கலை.

—பாளையம் அமரன்.

சாதி வெறியி நந்தும் சாத்திரப்பூ சல்கண்டும்
காதலிலே வெற்றிகண்டோம் வீழ்வில்லை—கோதாய்!
நலம்பொங்கும் தீந்தமிழ்த்தேன் அந்நியர்தம் வெற்றுக்
கலைக்கும் கலையாக் கலை.

—காவியக்கண்ணன், சேலம்.

கண்ணின் மொழியைக் கனிந்தநற் காதலை
பெண்ணின் எழிலார் பொலிவதனை—யெண்ணி
மலைத்த மனத்தின் மயக்க மதனைக்
கலைக்கும் கலையாக் கலை.

—க. நாராயணசாமி, இலக்குமி நாயக்கன்பாளையம்.

மூவேந்தர் பெற்றகலை முத்தமிழின் மூன்றுகலை
நாவேந்தர் நம்அண்ணா நாடெல்லாம்—மேவி
சளைக்காமல் செந்தமிழைச் செப்புங் கலையே
கலைக்கும்;கலையாக் கலை.

—ஆ. வி. நாதன், சென்னை-24.

சேரநாட்டில் செந்தமிழ்!

முப்பிரிவுடைய தமிழ்நாட்டில் ஒரு பிரிவாகிய சேர நாடே இன்று கேரளம் என்னும் பெயர் பெறும் நாடு. அந்நாட்டில் இன்று பேசப்படும் மொழி மலையாளம். மலையாள மொழியின் தாய் மொழி அல்லது வேர் மொழி தமிழ்தான் என்பது ஆன்றோர்கள் ஒப்பிய உண்மை. கேரளத்தவர்களே இதனை ஒப்புக்கொள்கின்றனர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை முதல் இன்று வாழும் டாக்டர் பி. ஜே. தாமஸ்வரை மலையாள மொழியின் ஆதித் தாய் தமிழ்தான் என்கின்றனர். தமிழ் பிறிதோர் மொழியுடன் கலந்த காரணத்தால் தனியொரு மொழியாக– மலையாளமாக– இன்று இருக்கிறது. பிறமொழிக் கலப்பால் தமிழ்மொழிக்கு கேடு விளையாது எனக் கூறும் மரமண்டையர்களுக்கு வரலாறு தரும் சான்றே இந்த மலையாள மொழி.

சான்றாக சிலவற்றை இக்கட்டுரையின்கண் காண்போம்; நோக்குயெனும் நல்ல தமிழ்ச் சொல் இன்று கேரளத்தில் வழக்கத்தில் உள்ளது. நாம் "நோக்கினாள் நோக்கி யிறைஞ்சினாள்" என்னும் குறளுக்குப் பொருள் கேட்கச் செல்கிறோம் புலவர்களிடத்து. ஆனால் கேரளத்தில் அது சாதாரணமாக பேசப்பட்டு வருகிறது. பணியென்ற மணியான சொல்லும் மலையாளிகள் என்றும் சொல்லும் சொல்லாக இருக்கிறது. நமக்குப் பொருள் புரிவதில்லை. அதுபோன்றே சிந்தித்தல் என்ற செந்தமிழ்ச் சொல் சந்தம் குறையாது வழக்கத்திலுள்ளது.

அடுத்து 'கறங்கு' வெனுஞ் சொல் சுழற்சியெனும் பொருளில் ஆளப்படுகிறது. இச்சொல் புறநானூற்றில் வரும்போது பொருள் புரியாது கறங்குகின்றோம் நாம். நாட்டுப்புற வழக்காக ஒல்லையெனும் சொல் சொல்லப்படுகிறது "உருதவர் போல் சொலினும் செருஅர் சொல், ஒல்லை யுணரப்படும்" எனுங் குறளில் வரும் அதே பொருள்தான் கேரளத்தார் கூறும் ஒல்லைக்கும். "ஓர்க" என்று திரு. வி. க. அவர்கள் தம் நூலில் அடிக்கடிக் கூறுவார்கள். இந்த செந்தமிழ்ச் சொல் ஓர்மை ஓர்த்துயென்று கேரளத்துப் பாமர மக்களாலும் கூறப்படுகிறது.

மற்றும் பட்டினப்பாலை மக்கள் உவவு நாளில் உல்லாசமாக கடலோரம் செல்கின்றனர் என்று காண்கிறோம் பட்டினப்பாலையில். தமிழாசிரியர் சொன்ன பிறகு தான் புரிகிறது உவவு நாள் என்பது முழு நிலவு தோன்றும் நாளென்று. ஆனால் கேரளத்தில் கருத்த உவாவு 'வெளுத்த உவாவு என்று முறையே அமாவாசையையும் பௌர்ணமியையும் கூறுகின்றனர். அவர்கள் சங்கத் தமிழ் மக்கள் வழி வந்தவர்களே என்பதற்கு இந்த ஒரு சான்று போதாதா? நம்மை அறியாது திகைக்க வைக்கும் அருந் தமிழ்ச் சொற்கள் கேரளத்தில் அழியாது ஆட்சி புரிந்து வருவது வியப்பிற்குரியது.

பின்னே மடியென்னும் சொல் சோம்பல் எனும் பொருளிலும் மறவியெனும் சொல் மறதியெனும் பொருளிலும் பேசப்படுகிறது கேரளத்தில். "நெடு நீர் மறவி மடி துயில் நான்கும் கெடு நீரார் காமக் கலன்" எனும் குறளில் நாமறியாத மடியும் மறவியும் அவர்கள் வைகலும் புகலும் பழஞ் சொற்களாக இருக்கின்றன. "பூழி வெங்கான மெய்தி புண்ணியத் துறைகளாடி" என வரூஉம் கம்பராமாயணத் தொடருக்கு நாம் பொருள் புரியாது விழிக்கிறோம். ஆனால் அந்தப் பூழியெனும் சொல்லிற்கு புழுதியென்ற பொருளைக் கேரளத்தில் அறிந்து வியப்புறுகிறோம்.

இதுபோன்று இன்னும் எத்தனையோ நல்ல தமிழ்ச் சொற்கள் கேரளத்தில் குடி புகுந்து உள்ளன. கல்லா மாந்தர்களும் தினந்தோறும் இல்லத்தில்பேசும் மலையாளப் பேச்சின் இடையிடையே இன்பத் தமிழ்ச் சொற்கள் பல வருகின்றன. சான்றிற்காக சிலவே இங்கு தரப்பட்டன. நம் நாட்டில் இலக்கியம் கற்றவர்களுக்கேத் தெரிந்த பல சொற்கள் நம்மண்டை நாட்டில் அழியாது இருக்கின்றன. நாம் மறந்தோம். அவர்கள் நாட்டிலே அவர்களோடு ஊடாடிப் பழகும் போதே புலப்படுகிறது தமிழ்த் தாயின் உதிரத் துதித்ததே மலையாளம் என்னும் மொழியென்பது.

—க. திருமேனி, பி. ஏ.

பாரிஸ் அழகிகள்

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10. 24 படங்கள் ரூ. 7. முன் பணம் அனுப்புக. தபாற்செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி (தெ.)
தபால் பெட்டி 1693, சென்னை-1.

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு